# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 13, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. குறுவை நெல் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக ரூ.134.83 கோடி மதிப்பீட் டில் சிறப்புத் தொகுப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என முதல்வர் ச.ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.

(i) பருவமழை நிகழாண்டில் எதிர்பார்த்த அளவு இல்லாததாலும், அணைகளில் போதிய நீர் இருப்பு இல்லாததாலும், மாற்று வழிகளில் நெல் உற்பத்தியைப் பெருக்க இத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

(ii) அதன் நீட்சியாக விவசாயிகளுக்கு நாளொன்றுக்கு 18 மணி நேர மும்முனை மின்சாரம் தடையின்றி வழங்கப்படும் என்றும் முதல்வர் கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிவிப்பு:

- தமிழ்நாட்டில் சராசரியாக 52.72 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில், காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களின் அனைத்துப் பகுதிகளிலும், கடலூர், திருச்சி மற்றும் அரியலூர் மாவட்டங்களில் சில பகுதிகளிலும் ஆண்டுக்கு 20.65 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. குறுவைப் பருவத்தில் மட்டும் அந்த அளவு 5.14 லட்சம் ஏக்கராக உள்ளது.
- டெல்டா அல்லாத இதர மாவட்டங்களில் ஆண்டுக்கு 32.07 லட்சம் ஏக்கரில் நெல் பயிரிடப்படுகின்றன.
- ஆண்டுதோறும் டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி செய்வதற்கு மேட்டூர் அணை ஜூன் 12-ஆம் தேதி திறக்கப்படுவது வழக்கம். நிகழாண்டு தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் 'எல்நினோ' நிகழ்வால் மழை அளவு 90 சதவீதத்துக்கும் குறைவாக இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- தற்போது பருவமழை தாமதமாகும் நிலையில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்தும் குறைவாகவே உள்ளது. அணையின் நீர் மட்டம் 79.56 அடி (நீர் இருப்பு: 41.52 டிஎம்சி) மட்டுமே உள்ளதால் திட்டமிட்டபடி மேட்டூர் அணையைத் திறப்பதற்கான சாத்தியக்கூறு இல்லாத நிலை உள்ளது.
- இதனால், காவிரி டெல்டா மாவட்டங்களில் வழக்கம் போல 5 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்வதற்கான வாய்ப்பு மிகவும் குறை வாகவே உள்ளது.
- எனினும், அங்கு வடிமுனைக் குழாய்க் கிணறுகள் (ஃபில்டர் பாயின்ட்ஸ்) மூலம் 3.55 லட்சம் ஏக்கர் வரை சாகுபடி மேற்கொள்ள இயலும் என்பதாலும், டெல்டா அல்லாத மாவட்டங்களில் நெல் சாகுபடியை ஊக்குவிக்கவும் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.
- அதன்படி, வடிமுனைக் குழாய்களைக் கொண்டு டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக ரூ.77.50 கோடி, டெல்டா அல்லாத மாவட்டங்களில் கார், குறுவை மற்றும் சொர்ணவாரி நெல் சாகுபடியை ஊக்கு விப்பதற்காக ரூ.57.33 கோடி என மொத்தம் ரூ.134.83 கோடி மதிப் பீட்டில் அத்திட்டம் செயல்படுத்தப்படும்.

- டெல்டா மாவட்டங்களில் உள்ள 2,325 கி.மீ. நீளமுள்ள சி மற்றும் டி வாய்க்கால்கள் ரூ.10 கோடி செலவில் தூர்வாரப்பட்டுள்ளன. நீர்வளத் துறை மூலமாக ரூ.100 கோடி செலவில் 4,971 கி.மீ. நீளமுள்ள ஏ மற்றும் பி வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகள் தொடங்கப்பட்டு 97 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன.
- குறுவை சாகுபடிக்கு 10,714 மெட்ரிக் டன் நெல் விதைகள் மற்றும் 4.02 லட்சம் மெட்ரிக் டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் பயன் பெறும் வகையில் தடையில்லா மும்முனை மின்சாரம் நாளொன்றுக்கு 18 மணி நேரம் வழங்கப்படும்.
- குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவிகளைப் பெற்றுப் பயனடையுமாறு விவசாயிகளை முதல்வர் ஜோசப் விஜய் கேட்டுக்கொண்டுள்ளதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.தொழிற்சாலைகள், நிறுவனங்களுக்கு பெட்ரோல் விற்பனை நிலையங்களில் மொத்தமாக டீசல், பெட்ரோல் விற்பனை செய்ய மத்திய அரசு 90 நாள்களுக்குத் தடை விதித்துள்ளது. அதேபோல், பெட்ரோல் விற்பனை நிலையங்களில் நாளொன்றுக்கு அதிகபட்சமாக ஒரு வாகனத்துக்கு 200 லிட்டர் டீசல் மட்டுமே விற்பனை செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(i) பொது மக்களுக்கான பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனையில் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க இந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

(ii) மேற்காசியாவில்ஈரான், அமெரிக்கா-இஸ்ரேல் இடையேயான போரால், அந்த பிராந்திய நாடுகளில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் உலகநாடுகளுக்குச் செல்ல முடியாத நிலை நிலவுகிறது. இதனால் பல நாடுகளில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்தியாவில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படாதவாறு மத்திய, மாநில அரசுகள் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

- தொழிற்சாலைகள், நிறுவனங்கள் உள்ளிட்டவற்றுக்கு மொத்தமாக டீசல், பெட்ரோலை பெட்ரோல் விற்பனை நிலையங்கள் விற்கக் கூடாது. அந்தத் தொழிற்சாலைகள், நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான டீசல், பெட்ரோலை மொத்தமாக அவர்களின் ஆலைகளுக்குள் இருக்கும் பெட்ரோல் விற்பனை மையத்தில் இருந்தே பெற வேண்டும். இந்த மொத்த பெட்ரோலும் டீசலும் ஆலைகள், நிறுவனங்களுக்குச் செல்வதைத் தடுப்பதன் மூலம், அவற்றை சாதாரண வாகன ஓட்டிகள் வாங்க முடியும். இதன்மூலம் உள்ளூர் சந்தையில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படாது.
- பெட்ரோல் விற்பனை நிலையங்களில் வாகனங்களில் நாளொன்றுக்கு 200 லிட்டர் மட்டுமே டீசல் நிரப்ப வேண்டும். அந்த டீசல், வாகன டேங்கர் அல்லது பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள்கள் தடுப்பு அமைப்பின் (பெசோ) அங்கீகாரம் பெற்ற கண்டெய்னர்களில் மட்டுமே நிரப்பப்பட வேண்டும். அந்த டீசலை வாகன ஓட்டிகள் மறுவிற்பனை செய்யக் கூடாது. இந்தக் கட்டுப்பாடு 90 நாள்களுக்கு அமலில் இருக்கும். அதன்பிறகு மத்திய அரசு விரும்பினால், புதிய அறிவிப்பு மூலம் மேலும் நீட்டிக்கப்படும்.
- இந்தக் கட்டுப்பாடுகள் முறையாகப் பின்பற்றப்படுகிறதா என மத்திய, மாநில அரசுகள் கண்காணிக்க வேண்டும். அதேபோல், பதுக்கல், கள்ளச் சந்தையில் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்கவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- பொதுமக்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் பெட்ரோல், சமமாக கிடைப்பதை உறுதி செய்வதே அந்த அறிவிபபின் நோக்கம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3.உலகின் புகழ் பெற்ற லண்டன் சிம்பொனி இசைக் குழுவின் 92 இசைக் கலைஞர்களுடன் இணைந்து தனது சொந்த சிம்பொனி இசையை உருவாக்கி சாதனை படைத்த இளம் இசைக் கலைஞர் லிடியன் நாதஸ்வரம் சென்னை திரும்பினார். அவருக்கு சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் தமிழக அரசின் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

(i) கடந்த ஆண்டு சென்னையில் நடைபெற்ற நிகழ்வில் திருக்குறளின் 1,330 குறள்களையும் இசை வடிவில் மக்களிடம் கொண்டு சேர்க்கும் முயற்சியை லிடியன் வெற்றிகரமாக மேற்கொண்டார். தமிழர்களின் தொன்மையான இசை மரபை உலக அரங்குக்கு சிம்பொனி கொண்டுசென்று இசை படைத்திருப்பது வரவேற்கத்தக்க சாதனையாகும். மேலும் பல உயரங்களை அவர் எட்ட வேண்டும் என்றார் அவர்.

(ii) அமைச்சர் ராஜ்மோகன் கூறுகையில், 'இசை இளவரசன் லிடியன் நாதஸ்வரத்தை நினைத்து தமிழ்நாடு பெருமிதம் கொள்கிறது. ஜூன் 21-ஆம் தேதி உலக இசை தினத்தை முன்னிட்டு, அவரது சிம்பொனி இசை வெளியிடப்படவுள்ளது. லிடியனுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க தமிழ்நாடு அரசு தயாராக உள்ளது என்றார் அவர்.

4. கிழக்கு காங்கோவில் உள்ள உள்நாட்டு அகதிகள் முகாமில் எபோலா தொற்றுப் பாதிப்பால் 22 பேர் உயிரிழந்ததாக ஐ.நா. அகதிகள் முகமை தெரிவித்துள்ளது.

(i) மக்கள் மிகவும் நெருக்கடியாக வசித்து வரும் இந்த முகாமில், நோய் அறிகுறிகள் உள்ளவர்களைத் தனிமைப்படுத்துவது சாத்தியமற்றது எனவும் தொற்று பீதியில் மக்கள் தப்பினால் நிலைமை மேலும் விபரீதமாகும் எனவும் கவலை எழுந்துள்ளது.

(ii) காங்கோவில் இதுவரை 676 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், 136 பேர் உயிரிழந்துள்ளனர். அண்டை நாடான உகாண்டாவில் 19 பேருக்கு பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

5. ‘ஸ்பேஸ்எக்ஸ்' விண்வெளி நிறுவனத்தின் ஆய்வு பொதுப் பங்கு வெளியீட்டின் (ஐபிஓ) மூலம், அந்நிறுவனத்தின் தலைவரான எலான் மஸ்க் உலகின் முதல் டிரில்லியனராக உருவெடுத்துள்ளார்.

(i) டிரில்லியனர் என்றால் 1 லட்சம் கோடி டாலர் (இந்திய மதிப்பில் ரூ.95 லட்சம் கோடி) சொத்து மதிப்பு கொண்டவர் ஆவார். உலக அளவில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் குறித்த கவலைகள் அதிகரித்துள்ள நிலையிலும், வெளிப்படையான பேச்சுகள் மற்றும் தனித் துவமான ஆளுமையின் மூலம் கோடிக்கணக்கான மக்களின் ஆதரவை எலான் மஸ்க் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

(ii) தென்னாப்பிரிக்காவில் பிறந்த 54 வயதான எலான் மஸ்க், டெஸ்லா மற்றும் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனங்கள் மூலம் உலகப் புகழ்பெற்றார். கடந்த 2022- இல் 4,400 கோடி டாலர் செலவில் 'எக்ஸ்' சமூக ஊடகத்தைக் கையகப்படுத்தியதன் மூலம் தனது செல்வாக்கை அவர் மேலும் விரிவுபடுத்தினார்.

(iii) மென்பொருள் தொழில்நுட்பத்துடன் கூடிய அதிநவீன டெஸ்லா மின்சார கார்களை உருவாக்குவதில் எலான் மஸ்க் காட்டிய தீவிரம், உலகளாவிய வாகன உற்பத்தித் துறையில்

மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியது. டெஸ்லாவின் வெற்றியே பாரம்பரிய வாகன உற்பத்தியாளர்களையும் மின்சார கார்களை நோக்கித் திரும்பச்செய்தது.

(iv) இதே ரீதியில் விண்வெளி ஆய்வு, செயற்கைக்கோள் இணையச் சேவை, ஏ.ஐ. தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இயங்கி வரும் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம், 7,500 கோடி டாலர் மதிப்பிலான பொதுப் பங்கு வெளீயீட்டை அறிவித்தது.

(v) இதன்மூலம், கடந்த 2019-இல் சவூதி அராம்கோ நிறுவனம் 2,600 கோடி டாலரைத் திரட்டியிருந்த முந்தைய ஐபிஓ சாதனையை, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் (7,500 கோடி டாலர்) மிக எளிதாக முறியடித்து வரலாற்றுச்சாதனை படைத்துள்ளது.

(vi) இப்பங்கு வெளியீட்டுக்கு முன்னதாகவே, எலான் மஸ்க்கின் சொத்து மதிப்பு சுமார் 78,000 கோடி டாலர்களாக மதிப்பிடப்பட்டிருந்தது. இது ஆல்பாபெட் (கூகுளின் தாய் நிறுவனம்) இணை நிறுவனர் லாரி பேஜ், ஆரக்கிள் நிறுவனர் லாரி எலிசன் ஆகியோரின் சொத்து மதிப்பைவிட பல மடங்கு அதிகமாகும்.

(vii) எலான் மஸ்க்கின் தற்போதைய சொத்து மதிப்பில் பெரும்பகுதி ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்திலேயே உள்ளது. பொதுப் பங்கு வெளியீட்டால் இந்நிறுவனப் பங்குகளின் மதிப்பு உயர்ந்ததால், எலான் மஸ்க் வசமுள்ள ஸ்பேஸ் எக்ஸ் பங்குகளின் மதிப்பு மட்டும் சுமார் 86,600 கோடி டாலருக்கு மேல் அதிகரித்துள்ளது. டெஸ்லா உள்ளிட்ட பிற நிறுவனங்களில் அவருக்கு உள்ள பங்குகளையும் சேர்த்து கணக்கிடும்போது, ஸ்பேஸ்எக்ஸ் பங்குகள் நாஸ்டாக் பங்குச்சந் தையில் வர்த்தகமாகத் தொடங்கியவுடன் அவரின் மொத்த சொத்து மதிப்பு 1.1 லட்சம் டாலரைத் தாண்டியது.

6. இந்திய துப்பாக்கி சுடுதல் முன்னாள் வீரரும், பயிற்சியாளராகச் செயல்பட்டு வந்தவருமான ஜஸ்பால் ராணா (49) காலமானார்.

(i) இந்திய துப்பாக்கி சுடுதல் அணியின் பயிற்சியாளராகவும் செயல்பட்டு வந்த ஜஸ்பால் ராணா, பாரீஸ் ஒலிம்பிக்கில் மனு பாக்கர் 2 வெண்கலப் பதக்கங்கள் வெல்ல அவரை வழிநடத்தியிருந்தார். ஜஸ்பால் ராணாவுக்கு அர்ஜுனா விருது (1994), பத்ம ஸ்ரீ விருது (1997), துரோணாச்சாரியா விருது (2020) ஆகியவற்றை வழங்கி, இந்திய அரசு கௌரவித்துள்ளது.

7. ஐசிசி-யின் 10-ஆவது மகளிர் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி, இங்கிலாந்தின் பர்மிங்ஹாம் நகரில் தொடங்கியது.

8. கேரளத்தில் ஷிகெல்லா பாக்டீரியா தொற்று பாதித்து பெண் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 18 பேர் புதிதாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

(i) மலப்புரம் மாவட்டத்தில் சரோஜினி (59) என்ற பெண், அந்த பாக்டீரியா பாதித்து உயிரிழந்துள்ளார். இதையடுத்து அந்த பாக்டீரியா பாதித்து இந்த மாதத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2-ஆக உயர்ந்துள்ளது. இதுதவிர்த்து, கேரளம் முழுவதும் 18 பேர் அந்த பாக்டீரியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ii) ஷிகெல்லா தொற்று என்பது அசுத்தமான உணவுகள், நீர் மூலமும், ஏற்கெனவே பாதித்தோரிடம் இருந்தும் பரவக் கூடியதாகும். இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு, காய்ச்சல், வயிற்று வலி ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

9. மாலத்தீவு நாட்டில் தட்டம்மை வேகமாகப் பரவி வருவதையடுத்து, அந்நாட்டுக்கு உதவும்

வகையில் 20,000 டோஸ் தட்டம்மை தடுப்பூசி மருந்து, 3 டன் மருந்து சாதனங்களை இந்தியா அனுப்பியுள்ளது. மாலத்தீவு நாட்டில் தட்டம்மை வேகமாகப் பரவி வருகிறது. ஏராளமானோர் இதனால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதையடுத்து மாலத்தீவுக்கு உதவும் பொருட்டு, தடுப்பூசி மருந்து, மருத்துவ சாதனங்களை இந்தியா அனுப்பிவைத்தது.

10. ரஷியாவின் கலினின்கிராட் நகரில் நடைபெற்ற சர்வதேச மணல் சிற்ப விழாவையொட்டிய போட்டியில் தனது படைப்புக்காக ரஷிய கிராண்ட் சாண்ட் மாஸ்டர் கோப்பையை வென்ற ஒடிஸாவைச் சேர்ந்த மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக்.

11. சீமைக் கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பாக ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழக அரசு சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு கேள்வி எழுப்பியது.

(i) தமிழகத்தில் சீமைக் கருவேல மரங்களை அகற்றக் கோரி, மதிமுக பொதுச் செயலர் வைகோ உள்ளிட்டோர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் பொது நல மனுக்களை தாக்கல் செய்தனர்.

(ii) இந்த மனுக்களை விசாரித்த உயர்நீதிமன்றம், தமிழகம் முழுவதும் சீமைக் கருவேல மரங்களை 6 மாதங்களுக்குள் அகற்ற வேண்டும். இந்தத் திட்டத்துக்கு செழுமைக் கருவூலம் எனப் பெயரிடப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு உத்தரவுகளை ஏற்கெனவே பிறப்பித்தது.

(iii) இந்த நிலையில், இந்த மனுக்கள் உயர்நீதிமன்ற நீதிபதிகள் என். சதீஷ்குமார், பரதசக்கரவர்த்தி அமர்வு முன் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, அரசுத் தரப்பில் முன்னிலையான வழக்குரைஞர் முன்வைத்த வாதம்:

- சீமைக் கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பாக பெரும்பாலான மாவட்டங்களில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இன்னும் ஒரு சில மாவட்டங்களில் அதிகாரிகளை நியமிக்க வேண்டியுள்ளது. முதல் கட்டமாக, ஓய்வு பெற்ற நீதிபதி ஏ. செல்வம் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, பணிகள் நடைபெற்று வருகின்றன. சிறிது கால அவகாசம் வழங்க வேண்டும் என்றார்.

12. கடந்த பத்தாண்டுகளில் இந்தியப் பள்ளி அமைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் தொடர்ந்து நிலவும் குறைபாடுகள் குறித்த நிதி ஆயோக் (NITI Aayog) அறிக்கை.

(i) கல்விக்கான அணுகல் மற்றும் பள்ளி இடைநிற்றல் தொடர்பான சவால்கள்

- பள்ளி வசதி: தொடக்கக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி வசதிகளுக்கு இடையே குறிப்பிடத்தக்க இடைவெளி உள்ளது. இந்தியாவில் 7.3 லட்சம் தொடக்கப் பள்ளிகள் உள்ள நிலையில், உயர்நிலைப் பள்ளிகள் 1.64 லட்சம் மட்டுமே உள்ளன.
- அதிக இடைநிற்றல் விகிதம்: 12-ஆம் வகுப்பை முடிப்பதற்கு முன்பாகவே, ஒவ்வொரு 10 மாணவர்களிலும் சுமார் 4 பேர் பள்ளிக் கல்வியை இடையில் நிறுத்திவிடுகின்றனர்.
- பொருளாதாரத் தடைகள்: 14 வயதுக்குப் பிறகு 'கல்வி உரிமைச் சட்டத்தின்' (RTE Act) கீழ் இலவசக் கல்வி முடிவுக்கு வருதல், குடும்ப வறுமை, அதிகக் கட்டணம், மற்றும்

போக்குவரத்து, பாடப்புத்தகங்கள், தனியார் டியூஷன் ஆகியவற்றிற்கான செலவுகள் அதிகரிப்பு ஆகியவை இடைநிற்றலுக்குக் காரணமான காரணிகளாக உள்ளன.

(ii) ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் உள்கட்டமைப்பு இடைவெளிகள்

- ஒரே ஆசிரியர் கொண்ட பள்ளிகள்: நாடு முழுவதும் 1,04,125 பள்ளிகள் ஒரே ஒரு ஆசிரியரைக் கொண்டு இயங்குகின்றன. இதில் தமிழ்நாட்டில் உள்ள 3,671 பள்ளிகளும் அடங்கும்; இங்கு 95,000-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஒரே ஒரு ஆசிரியரே பாடம் கற்பிக்கிறார்.
- அடிப்படை வசதிகள்: உள்கட்டமைப்பு ஒரு சவாலாகவே உள்ளது; இந்தியா முழுவதும் 14,505 பள்ளிகளில் குடிநீர் வசதி இல்லை, மேலும் 59,829 பள்ளிகளில் கைகழுவும் வசதிகள் இல்லை.
- காலியிடங்கள்: தமிழ்நாட்டில் அவசரமாக நிரப்பப்பட வேண்டிய 5,000-க்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளதாக அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

(iii) கற்றல் தரம் குறித்த கவலைகள்

- கற்றல் குறைபாடுகள்: அரசுப் பள்ளிகளில் 3-ஆம் வகுப்பு மாணவர்களில் 27.6% பேர் மட்டுமே அடிப்படை கழித்தல் கணக்குகளைச் செய்ய முடிகிறது; அதே சமயம் தனியார் பள்ளிகளில் இந்த விகிதம் 47.5% ஆக உள்ளது.
- ஒப்பீட்டுச் செயல்பாடு: NCERT நடத்திய கற்றல் திறன் ஆய்வில், தமிழ்நாட்டு மாணவர்கள் 240-க்கு சராசரியாக 55.1 மதிப்பெண்களே பெற்றனர். இது கேரளா (140.3) மற்றும் பஞ்சாப் (150.4) மாநில மாணவர்களின் மதிப்பெண்களை விடக் கணிசமாகக் குறைவாகும்.
- பின்தங்கிய மாணவர்கள்: 2025-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில், தமிழ்நாட்டில் (6 முதல் 9-ஆம் வகுப்பு வரை) 7.47 லட்சம் மாணவர்கள் கற்றலில் பின்தங்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது; இவர்களுக்குச் சிறப்புக் கல்வி நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

(iv) தமிழ்நாட்டின் செயல்பாடுகளும் வெற்றிகளும்

- நலத்திட்டத் தலைமை: காலை மற்றும் மதிய உணவு, இலவச சீருடைகள், பாடப்புத்தகங்கள், பைகள், மிதிவண்டிகள் மற்றும் பேருந்து பயணச்சீட்டுகள் போன்ற விரிவான நலத்திட்டங்களால், கல்வியில் தமிழ்நாடு ஒரு முன்னோடியாகக் கருதப்படுகிறது.
- மாணவர் சேர்க்கை அதிகரிப்பு: இந்த முயற்சிகள் மாணவர் சேர்க்கையை வெற்றிகரமாக அதிகரித்து, இடைநிற்றல் விகிதங்களைக் கணிசமாகக் குறைத்துள்ளன.
- கல்விசார் சாதனைகள்: சமீபத்திய 10ஆம் வகுப்புத் தேர்வு முடிவுகள் ஒரு நேர்மறையான மாற்றத்தைக் காட்டியுள்ளன; கணிதத்தில் மட்டுமே கவனம் செலுத்தும் பாரம்பரிய முறையைத் தாண்டி, ஆயிரக்கணக்கான மாணவர்கள் அறிவியல் மற்றும் சமூக அறிவியலில் முழு மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர்.

(v) நிர்வாக மற்றும் அமைப்புசார் சிக்கல்கள்

- அரசு ஆசிரியர்கள் EMIS தரவு உள்ளீடு, உணவு கண்காணிப்பு மற்றும் நலத்திட்ட

விநியோகம் போன்ற நிர்வாகப் பணிகளால் திணறுகின்றனர். கற்பித்தலில் மட்டுமே முழுமையாகக் கவனம் செலுத்த ஏதுவாக, தனி நிர்வாகப் பணியாளர்களை நியமிக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- சமீபத்தில் 37 நாட்கள் போராட்டம் நடத்திய இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து எழுந்துள்ளது.
- தமிழகத்தில் உள்ள பெரும்பாலான பள்ளிகளில் கழிவறைகள் இருந்தாலும், அவை பெரும்பாலும் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை, மேலும் அவற்றுக்குச் சிறந்த சுகாதார மேலாண்மை தேவைப்படுகிறது.

13. தற்போதைய உலகச் சூழலில் 'குவாட்' (Quad) கூட்டணியின் உத்திசார் பரிணாம வளர்ச்சி, நோக்கங்கள் மற்றும் உள்நாட்டுச் சவால்கள்.

(i) தோற்றம் மற்றும் தத்துவார்த்த அடித்தளம்

- இந்திய மற்றும் பசிபிக் பெருங்கடல்களை இணைக்கும் யோசனை 1920-களில் ஜெர்மன் புவியியலாளர் கார்ல் ஹவுசோஃபரால் (Karl Haushofer) முன்வைக்கப்பட்டாலும், இதற்கான நவீன உத்திசார் கட்டமைப்பு ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவால் உருவாக்கப்பட்டது.
- 2006-ல் இந்திய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அபே, "இரு கடல்களின் சங்கமம்" (Confluence of the Two Seas) என்ற கருத்தாக்கத்தை அறிமுகப்படுத்தினார்; இதில் இந்திய மற்றும் பசிபிக் பெருங்கடல்களை சுதந்திரம் மற்றும் செழிப்புக்கான ஒரே உத்திசார் வெளியாகக் கருத வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.
- சீனாவின் அழுத்தம் மற்றும் ஆஸ்திரேலியாவின் விலகல் காரணமாக 2008-ல் முடங்கிய இக்கூட்டணி, 2020-ல் ஆஸ்திரேலியா மீண்டும் 'மலபார்' கடற்படைப் பயிற்சியில் இணைந்தபோது புத்துயிர் பெற்றது.

(ii) உத்திசார் மாற்றங்கள் மற்றும் சீனாவின் தாக்கம்

- சீனாவின் பிரம்மாண்டமான 'பட்டை மற்றும் சாலை முன்முயற்சி' (BRI) மற்றும் தென் சீனக் கடலில் அதன் அதிகரித்து வரும் கடற்படை ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்ப இக்கூட்டணியின் கவனம் மாறியுள்ளது.
- சர்வதேச கடல் வழித்தடங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, கூட்டு கடல்சார் கண்காணிப்பு மற்றும் பிராந்திய விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உறுதிப்பாடு, 2026-ல் புது தில்லியில் நடைபெற்ற வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தின் முக்கிய விளைவாக அமைந்தது.

(iii) நிறுவனத் தன்மை: முறைசாரா அமைப்பு vs. ராணுவக் கூட்டணி

- 'குவாட்' என்பது நேட்டோ (NATO) போன்ற ஒரு ராணுவ ஒப்பந்தம் அல்ல; இது பகிரப்பட்ட விழுமியங்கள் மற்றும் தன்னார்வ ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு முறைசாரா அமைப்பாகும்.
- 'குவாட்' அமைப்பால் கட்டளைகளையோ அல்லது பாதுகாப்பு உத்தரவாதங்களையோ பிறப்பிக்க முடியாது; மாறாக, "சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக்" பிராந்தியத்தைப் பராமரிக்கத் தேவையான தூதரக மற்றும் பாதுகாப்பு கொள்கைகளை ஒருங்கிணைப்பதற்கான ஒரு தளமாக இது செயல்படுகிறது.

(iv) தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பு

ஒரு வலுவான தொழில்நுட்பச் சூழலை உருவாக்க, 'குவாட்' அமைப்பில் உள்ள நான்கு பொருளாதார வல்லரசுகளின் தனித்துவமான பலங்கள் பயன்படுத்தப்படுகின்றன:

- அமெரிக்கா: செயற்கை நுண்ணறிவு (AI) ஆராய்ச்சி மற்றும் காப்புரிமைகளில் (patents) உலக அளவில் முன்னணியில் உள்ளது.
- ஜப்பான்: ரோபோட்டிக்ஸ் மற்றும் மேம்பட்ட உற்பத்தித் துறையில் உலகளாவிய முன்னோடியாகத் திகழ்கிறது.
- ஆஸ்திரேலியா: குவாண்டம் கம்ப்யூட்டிங் (Quantum computing) ஆராய்ச்சிக்கான முக்கிய மையமாக உருவெடுத்து வருகிறது.
- இந்தியா: தொழில்நுட்பப் புத்தாக்கத்திற்குத் தேவையான பிரம்மாண்டமான டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் உயர் திறன் கொண்ட மனிதவளத்தை வழங்குகிறது.
- பணிக்குழுக்கள்: குறைக்கடத்திகள் (semiconductors), தூய ஆற்றல் மற்றும் மேம்பட்ட தொலைத்தொடர்பு போன்ற முக்கியத் துறைகளில் கவனம் செலுத்தும் வகையிலான கூட்டு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

(v) முக்கிய சவால்கள் மற்றும் தடைகள்

- உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு தேசிய முன்னுரிமைகளையும் பிராந்தியக் கண்ணோட்டங்களையும் கொண்டிருப்பதும், அவை எப்போதும் ஒன்றோடொன்று ஒத்துப்போவதில்லை என்பதும் உடனடிச் சவாலாக உள்ளது. ஒத்துழைப்பைத் தக்கவைப்பதற்கு, உறுப்பு நாடுகளுக்குள் ஏற்படும் அரசாங்க மாற்றங்களையும் மீறி நிலைத்திருக்க வேண்டிய தொடர்ச்சியான இராஜதந்திர முயற்சியும் உயர் மட்ட அரசியல் அர்ப்பணிப்பும் தேவைப்படுகின்றன.
- நான்கு மாறுபட்ட நாடுகளில் கூட்டுச் செயல் திட்டங்களைத் திறம்பட நிர்வகிப்பதும், தொழில்நுட்பத் தரங்களை நிறுவுவதும் ஒரு சிக்கலான பணியாகவே உள்ளது.

(vi) எதிர்கால மூலோபாயப் பார்வை

- "மூலோபாய யதார்த்தவாதம்" என்ற கொள்கையின் கீழ் அமெரிக்கா தனது உலகளாவிய சுமையைக் குறைக்க முற்படுவதால், அதிகாரச் சமநிலையைப் பேணுவதற்கு குவாட் அமைப்பு முன்வர வேண்டும்.
- நீண்டகால நிலைத்தன்மையையும் அமைதியையும் உறுதி செய்ய, பெரும் வல்லரசுகளுக்கு இடையே அதிகரித்து வரும் போட்டியை நிர்வகிப்பதற்காக, குவாட் அமைப்பு மற்ற இந்தோ-பசிபிக் நாடுகளுடனான தனது உறவுகளை ஆழப்படுத்தி, ஒரு பரந்த கூட்டணியை உருவாக்க வேண்டும்.